699

உ

சிவமயம்.

2 - NOV 1923



# கோட்டையூர்

# காவடிச்சிந்து.

மதுரை, வடக்குமாசிவீதி,

மனோன்மணி விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

Q26:38·2119S!10
N23

உ

முருகன் துணை.

குன்றக்குடி

# முருகர்
# காவடிச் சிந்து

புஷ்பவனம்

குருசாமி பொன்னுவையரவர்கள்

மாணுக்கரி லொருவராகிய கோட்டையூர் காட்டுக்கோட்டை

பெ. லெ. அ, சின்னையா செட்டியாரவர்கள்

குமாரர்

**சிதம்பரஞ் செட்டியா ரவர்களால்**

இயற்றியதை,

கோட்டையூர் நகரத்தாரவர்களின்

வேண்டுகோட்கிணங்கி

ஷையூர் பிரமஸ்ரீ ராஜவித்துவான்

**மீ. சுப்பைய ரவர்களால்**

பார்வையிடப்பெற்று

மதுரை, தாசில்தார் பள்ளிவாசல் தெரு,

**கு. மாயாண்டி பிள்ளையாற்**

நமது

மதுரை வடக்குமாசிவீதி,

மனேன்மணி விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1923.

காப்பிரைட்) = (ரிஜிஸ்டர்டு.

2-NOV 192

உ

முருகன் துணை

894.8111
2624



# சாத்து கவி.

மதுரை வித்வான்,

**த. குப்புசாமி நாயுடு அவர்கள்**

இயற்றிய வெண்பா.

குன்றாக் குடிக் குமரக் கோன்கா வடிச்சிந்தை
அன்றாட கம்படிக்க வானந்தம்—நன்றாகும்
கோட்டையூர்ச் சின்னையாக் கோமான் றவத்துதித்தோன்
நாட்டிற் சிதம்பர ராசன்.

ஆனந்த மாங்களிப்பு அண்டர்க் கமுதாகித்
தேனந்த மாங்கனிபோற் றித்திக்கும்—மானந்த
வள்ளிதெய் வானை மணவாள னுமுருகன்
தெள்ளுதமிழ்க் காவடிச் சிந்தே.

உ

குமரன் றுணை.

2 - NOV 1923

குன்றக்குடி

# முருகர் காவடிச்சிந்து.

## வெண்பா.

கந்தன்மேற் பாடுமிந்தக் காவடிச்சிந்துக் கவிக்குச்
சந்ததமும் வாக்குநயந் தந்தருள்வாய்—சுந்தரஞ்சேர்
ஆனைமுகத் தோனே அறுமுகற்கு மூத்தோனே
ஞானகரு ணாகரநா தா.

## ஆனந்தக்களிப்பு.

என்றும் கோட்டையூர்மாநகர் சிறப்பாம் எங்கள்
குமரனரு ளாற்சொன்ன ஆனந்தக்களிப்பாம்
பாரில் நல்லகவி சொற்புலவர் முன்னே நானும்
நாடியுரை செய்தனன் குகன்சரிதைதன்னை
மகா வல்லவர்கள் குற்றம்பா ராட்டார் என்ற
மனத்துணிவி னலிதனைவழுத்தினேன் பாட்டால்
இருண்ட காரிலகுந் திருமேனி சேர்ப்பாம் மிக்க
கற்பூரவிநாயகன் பாதமலர் காப்பாம்.
உனது தந்தைகையில் மாங்கனிக் காக சுவாமி
சர்வலோ கேஸ்பரனை வந்துவல மாக
வலமாய் வந்துமாங்கனி தன்னைப் பெற்றாய் வனத்தில்
வள்ளிதனைத் தம்பிக்கு மாலையிட்டு வைத்தாய்
சொல்ல நன்மையாங் காவடிச் சிந்து தன்னை
நாடியே உரைசெய்ய நாவினிடை வந்து
மிருந்த தனமிகும் வாணியருள் செய்ய நல்ல
சங்கீதமெட்டுடன் பாடினேனுய்ய

இந்தப் பாரேழு மீன்றவுமை பெற்ற சத்தி
பாலகன்றன்மீது சிந்துசொல்வேன் மெத்த
நல்ல பதிதனிற் குன்றைநகர் சிறப்பு நன்றாய்ப்
பாடுதற்கழகான ஆனந்தக்களிப்பு
குற மங்கையிடம் வளையல்தனை வித்தான் வள்ளி
மணவாளன் கதிர்வேலன் மயில்வாகனத்தான்
இமைய மலையரசன் மகளீன்ற பாலன் குற
மாதானவள்ளிக்கு வாய்த்த வடிவேலன்
தேவ தேவரைச்சிறைமீட்டும் வாகன் வள்ளி
தெய்வானைக் கிளையான சித்ரமயில்வாகன்
சிவ பத்தியுடன் விரதமு மிருந்தார் சத்தி
பாலகனை யனைவோருங் கண்டுமே பணிந்தார்
வந்து ஏழுமிவ்வுயர் வணிகர் கோடி நீரில்
இறங்கியே ஸ்நானமது செய்தார்கள்கூடி
வெண் பட்டுவஸ்திரங்களுந் தரித்து நமது
பார்வதி சமேதனை நெஞ்சிற்குறித்து
தங்கள் இட்டமுடன் பூசினர்வி பூதி அன்பர்
ஏகமாம் பஞ்சாட் சரமதனை யோதி
உயர்ந்த சொர்னத்தாற் காவடிகள் செய்து அதனைச்
சுற்றிலும் பலநவ ரத்தினம் பெய்து
இணையாய் இருபுறமும மயிலிறகு சேர்த்து அதனை
யிறுகவே சுற்றிலும் பட்டு நூல்கோர்த்து
பட்டுக் குஞ்சங்கள் முத்தோடு கோர்த்து சுற்றிக்
குலுங்கவே கட்டினு ரெல்லோரும் பார்த்து
நன்றாய்க் கட்டினர் முத்திரையும் வைத்து நமது
கந்தனுக்கன்னனை வேத்திய மமைத்து
குமரனைப் பார்த்தவர்கள் தரிசித்துக் கொண்டு மிக்கப்
பண்போடு பிரசாதம் வாங்கியுட்கொண்டு
பச்சை மயில்மீதி லேறிவரும் வேலன் நம்மள்
வள்ளிதெய் வானைக்கு வாய்த்த மணவாளன்
விநாயகர் வரம்பெற்றுக் கோவில் தனைக்கண்டார் மதுரை
மகாலிங்க மீனாட்சி மலரடியைக் கண்டார்
ஆதி சொக்கரிடப் பக்கங்கண் காட்சி நல்ல
சுந்தரீ வந்தென்னை யாளுமீ னாட்சி

மெத்த நேர்த்தியாக் திருப்பணியைப் பாரும் இதற்கு
நிகரில்லை யென்றுலகர் சொன்னாரே கேளும்
மகா வல்லவன் சிற்பியிவ னென்றார் இந்த
மண்டலத்தி லிதன்பெருமைக் கிணையில்லையென்றார்
இதற்கு இந்திரவிமானம் நிக ராமோ ஒளியில்
எற்றமிகு சூரியனை யிணைசொல்லப்போமோ
சொர்ன மணிமண்ட பங்காண வாரும் இதற்கு
வளமருவு தேவசபை நிகரில்லை பாரும்
தேவ தேவர்களுந் திருமாலுங் கண்டார் உன்னைத்
தினந்தோறுந் தவறாமற் றெரிசித்துக் கொண்டார்
எங்கும் தேடவுமே காணாத பாதன் நல்ல
சின்மய சொரூபனெனுஞ் சொக்கலிங்க நாதன்
தில்லை ஆண்டவனே நின்மகிமை சொல்ல என்றால்
ஆகுமோ சேடனைப்போ லாயிரநாவல்ல
தன வசியகுல நகரத்தார் தானே வந்து
வணங்கு மெங்கள் சொக்கேசர் சன்னதியில் நானே
யான் சொன்ன கவி தன்னையரங் கேற்ற அதனிற்
சொற்பிழைகள் வாராம லென்னையுமே காத்த
வேத தெய்வமறை யோர்களையு மேற்றி செல்வத்
திருநாவுக் கரசுமுதல் நால்வரையும் போற்றி
என்றுங் குன்றாத வாழ்வுகள் கிடைத்தே இளைய
குமரகுரு பரர்தந்தை யருளைப் படைத்தே
சிவ பத்தியாய் மண்டபத்திற் சென்றார் குமரனைப்
பார்த்துமே கரத்தினால் நமஸ்கரித்துக் கொண்டார்
குன்றைப் பதியில்வாழ் சண்முகனை நாடி மிக்க
பத்தியுட னடியார்க ளவன்புகழ்கொண்டாடி
சீத பாதபங் கயமலரும் பணிந்து என்னை
பற்றுபெரும் பாதகமும் விட்டோடத் துணிந்து
நல்ல சீதமதி நிகர்வதன வள்ளி , யெங்கள்
தெய்வானை மணவாளர் திருப்புகழையள்ளி
முருகன் அருள் பெருகுங் கவிவாணர் பாட தேவ
அண்டர்க ளடங்கலும் வந்து கொண்டாட
கைலை சங்கரன் உமையீன்ற பாலன் வெகு
தன்மையுடனருளுவா ராறுமுகவேலன்

சொந்த தமையனைத் தம்பியும் நினைந்தார் வனத்தில்
சண்முக நாதனிடங் கணபதியும் வந்தார்
குற மங்கையரை வனமதிற் கண்டான் கந்தன்
மகிழ்ந்துமே வள்ளிதனை மாலையிட்டுக்கொண்டான்
கூடல் ஆவலாய்ச் சொக்கருட பாலன் சத்தி
யருளினால் வேலதனைப்பெற்றுவனு கூலன்
கைலை ஆண்டிமக னண்டியிவ னண்டி வந்த
அடியார்க்குவேணவரம் யாவுங்கொடுப்பாண்டி
சிவ தில்லைநடராஜன்மகன் தாண்டி நல்ல
திருச்செந்தூ ரெட்டிகுடி குன்றக்குடியாண்டி
நல்ல மயூரகிரி வாசனிவன் தாண்டி பொதிகை
மலையில்வாழ் குருமுனிக்கு அருள்கொடுத்தாண்டி
கந்தன் தாய்வீடு சிதம்பரந் தாண்டி குன்றைச்
சரவணப் பொய்கையிலே வந்து வளர்ந்தாண்டி
குன்றைக் காங்கேயன் பாதமல ருற்று எங்கள்
கந்தனுட கிருபைபைப் அனைவோரும்பெற்று
மிக்க அன்பினொடு காவடி தோட் கொண்டார் முன்பாய்
ஆடினர் சிந்துகவி பாடியருள்கொண்டார்
இணையாய்க் குயிலோசை போலிவர்கள் படிக்க இந்தக்
குரலோசை நயமென்று மயில் வந்து நடிக்க
கரிய குருவிதனக் குபதேசஞ் செய்தாய் நாரைக்
குற்றதொரு வினை தீர்த்து முத்தி பெறச்செய்தாய்
மேருப் பொன் மலையை வில்லின்வடி வாலே திரி
புரம் பொடித்த புண்ணியாபிட்டின்ருசியாலே
மாறன் பிரம்படியும் பொறுத்ததோ தேகம் உதிர்ந்த
பிட்டுக்கு மண்சுமந்தா லேசாமோ லோகம்
வாணிச்சி பிட்டுக்கு மண்சுமந்த நாதா மாறன்
பிரம்பி னலடிகொண்ட ததுவும் போதாதா
விறகுக் கட்டுடன் வளையல்களும் வித்தாய் தென்னன்
களைத்துவரும் போதுதண் ணீர்ப்பந்தல் வைத்தாய்
மதுரைப் பாண்டியன் மருகனென வந்தாய் பிள்ளை
பரிந்து நடு நெருப்பிலிடும் ஏடதனைக்காத்தாய்
எல்லாம் வல்ல சித்தராகி வினை தீர்த்தாய் ராஜன்
மயங்கவே கல்லானைக் கரும்பருந்தப்பார்த்தாய்

மதுரைப் பாண்டியன் மகுடத்தைத் தாங்கி அம்மை
பரிபால னஞ்செய்த செங்கோலை வாங்கி
சுவாமி ஆண்டிடவும் நாம்செய்த பாக்யம் இந்த
அவனிதனி லார்செய்வாரிதைவிடசிலாக்யம்
இந்த மண்டலம் புகழ் வாத வூரர் குதிரை
வாங்கவரும் வழிமறித்தே உபதேசங்கூற
அன்பர் கொண்டுவரும் பொருளெலாம் பெற்றாய் தென்னன்
குறைதீர மதுரைதனிற் பரிமேல் வந்துற்றாய்
கலைகள் தேறும்அறிஞ் ஞோர்புகழும் மூர்த்தி பூசத்
திருவிழா வுற்சவங் காணவெகு நேர்த்தி
குற வள்ளியுட கணவனையுந் தேடி அன்பர்
வாழ்த்தியே வந்தார்கள் கோடானகோடி
பங்குனி உத்தரத் திருவிழா நேர்த்தி அங்கே
உற்றதிருக் காட்சியையு முரைப்பனதன் கீர்த்தி
மீனமதில் ஆயிலியம் வருவதைக்கண்டு மிக்க
அன்பினொடு நகரத்தார் பாற்குடங்கொண்டு
முருகன் மாமனுடபேரதனைக் கொண்டோன் கையில்
வழுவாமலெப்போதும் பாற்செம்பைக் கொண்டோன்
மிக்க குன்றைநக ருறைகந்த வேளை கண்டு
கும்பிடப் போவதற் கிதுநல்லவேளை
நன்று என்றறிஞ்ஞ ரனைவோருங் கூடி புயத்தில்
எடுத்தார்கள் காவடிகள் நன்மையெனத்தேடி
சிவனை வணங்கியே விடைபெற்றுக் கொண்டார் அங்கு
வளமான வூரணியை வலமாக வந்தார்
கோட்டை ஊருகாவலன்மேடை கண்டார் அங்கு
ஓயிலாக யாவரும் விளையாடிக்கொண்டார்
கண்டு கொண்டவுடன் சிந்துதனைப்பாடி குன்றைக்
கோலவடி வேல்முருகன் பாதமலர்தேடி
திவ்ய கந்தவேள் மலரடி யுகந்து திருக்
கற்பூரவி நாயகர்முன் காவடியும்வந்து
நாங்கள் எல்லோரும் உன்பிள்ளை நன்றாய் சுவாமி
எங்களைக் காப்பாற்ற மின்கடமையென்றார்
அடியார்க்கு வேண்டும்வரம் யாவுங் கொடுத்தார் நல்ல
விபூதிப்பிரசாதம் வாழ்த்தியே கொடுத்தார்

என்றும் கோட்டைநாயகிபாதம் போற்றி நல்ல
குணமான வயிரவர்பாதமல ரேத்தி
திவ்ய மருமலர்சேர் குழல்மருவு வல்லி நல்ல
மலைவல்லி கலைவல்லி வளர்கருப்பு வில்லி
ஆதி மகதேவி சகதேவி மாரிகற் குமரி இந்த
வையகம் புகழ் பெற்ற மாதங்கி கௌரி
என்றும் வளர்கோட்டைத் தென்திசைமுதல்வன் நாளும்
வந்துமே யெங்களைக் காப்பாற்றுந்தலைவன்
மிக்க தாஷ்டீகன் சொத்தக் கருப்பன் வேண்டுந்
தருணத்தில் வேண்டிய வரங்கள் மிகத்தருவன்
வருகிறோம் என்றடி வரம் பெற்றுக் கொண்டார் அடியார்
எல்லோரும் நீசருந்து மிடமதனைக்கண்டார்
பங்குனி திருவிழா வுற்சவத்திற் றனே தருமம்
சிறப்பாகச் செய்கிறார் நகரத்தார் தானே
சிவ ஆலயங்கள் திருப்பணிகள் செய்வார் மிக்க
அன்னசத் திரங்களொடு மடங்கள்மிகவமைப்பார்
ஆதி சதுர்வேத சாலைக ளமைப்பார் நல்ல
தண்ணீரின் சாலைகள் தடாகமு மமைப்பார்
கோட்டை ஊரழகை யிந்திரனுங் காணக் கண்கள்
ஓராயிரம் பெற்றனென்பதும் மாண
என்றும் மங்காத செல்வமுத லாக மிக்க
வளமோங்குங் கோட்டை நகர் நீடூழிவாழ்க
மகிழ்வாய் பாருளோ ரெல்லாருங் கூடி யிந்தப்
பதிக்கு நிகரில்லையென் றனுதினங்கொண்டாடி
அன்ன சத்திரம் மடந்தடா கங்கள் பஞ்ச
தருவை நிகர் நகரத்தார் மாடகூடங்கள்
நான் மாதவம் என்ன செய் தேனே வள்ளி
மணவாளர் சிந்துதனைப் பாடுதற்கு நானே
சுவாமி என்னகுறை யிருந்தாலுந் தீர்த்து உந்த
னிணையடியைத் துதிசெய்யு மெங்களைக்கண்பார்த்து
மதுரை பாண்டியன் மகனா யிருந்தாய் உக்கிர
பாண்டிய னாகவே செங்கோல் புரிந்தாய்
கைலை சங்கரற் குபதேச மெய்யா குமர
சரஹண பவாகுகா பன்னிரு கையா

தெய்வ இந்திரனைக்கலங்காதே யென்று சூரன்
இடுக்கத்தைத் தீர்த்துமுடி சூட்டினானன்று
மகா சூரசம் மாரனருள் கூடி எங்கள்
சுப்ரமண் யக்குலத் தெய்வமென நாடி
வடி வேலவனைக் கண்டுமகிழ்ந் திடவே வெகு
விந்தையுட னரகரா வென்றுபுகழ்ந்திடவே
அடியார் தாமதங்க ளினியென்ன வென்றார் கந்த
சாமியுட அருள்பெருகிப் பாதைவழிசென்றார்
வணிகர் காணிக்கை கொண்டுவந் தாரே குன்றைக்
கந்தனை யெண்ணியே கூடிநடந் தாரே
மெத்த ஒயிலாக விளையாடிக் கொண்டார் கட்டியம்
உரைத்துமே உலாப்பாடி நூடுவழி கண்டார்
ஐயன் குன்றையம் பதிக்கேக வேண்டி அன்பர்
கூடியே வந்துவடக் கூரணியைத்தாண்டி
சர்க்கரை காவடியெடுத்து நட மாடி தொந்திக்
கணபதியைப் போற்றிநகர் வீதிவழி கூடி
வருகிறோம் என்றாடி வரம் பெற்றே நின்றார் வணிகர்
எல்லோரும் நல்வேலங் குடியதனிற் சென்றார்
திருக் கண்டீஸ்வ ரர்மகிழ்ந்த மாது செல்வி
காமாட்சி பாதமலர் கருதியெப் போதும்
ஏழு வணிகர்குலந் தழைக்கவந்த நாதா உன்றாள்
வழுத்துகின்ற குடிகளை நீ வளரவைப்பாய் நீதா
நாங்கள் பணிசெய்து வணங்கினோ மையா எங்கள்
பரமனே கயிலாச பதியான மெய்யா
வைகையில் தாண்டியே எதிரேறச் செய்தாய் சமணர்
தங்களைக் கழுவேற்றிச் சமயமிலைசெய்தாய்
பணிசெய் குண்டோ தரன் பசியைத் தீர்க்க அன்னக்
குழிவைகை யமைப்பித்தா யெல்லோரும் பார்க்க
மதுரைத் தாண்டவா அன்பர்பசி தீர்க்க வெள்ளித்
தலமீதி லாடினீர் கயற்கண்ணி பார்க்க
வனமுற்ற நரிகளைப் பரியாக்கும் நாதா பரியை
நரியாக்கித் தென்னவனை நகைசெய்த நீதா
வெள்ளி மலைபோலு மெருதேறிக் கண்டாய் தேவி
மணமாலை தனைச்சூட்டி மகுடமதைக்கொண்டாய்

சிவனை வணங்கியே விடைபெற்றுக் கொண்டார் அங்கு
வளமான வேலைநக ரம்மனையுங்கண்டார்
நகர்க்கு ஆதாரம் பெரியவளே யாகும் அம்மன்
அருளினால் நிலைபெற்ற ததிகசெல்வமாகும்
அதிக ஆனந்த சோதிமய வுருவாள் பாலையகா
டடங்கலும் ஆளவந்தாண் டருள்புரிவாள்
அம்மை வரம்பெற்று வீதிவல மாக மிக்க
வளமான சிதம்பரப் பொய்கையிடமாக
பொய்கைத் தென்கரையிலமர்ந்தமுனி யையா என்றும்
தேவர்களுந்திருமா லுங் கூடுமிடம் மெய்யாய்
அடியார் சென்றங்கே ஆனந்தங் கொண்டார் அங்கு
தேவாதி தேவர்களைத் தெரிசித்துக்கொண்டார்
முனியை மகிழ்ந்துமே அனைவோருஞ் சென்றார் முருகன்
மலரடியே துணையென்று வனத்தூடு சென்றார்
விடியக் காலையிலே மாங்குயில்கள் பாடும் அதனைக்
கண்டவுடன் மயிலினங்கள் சிறகைவிரித்தாடும்
தங்கள் இனத்தோடு மான்கள்விளை யாடும் கண்ட
யிடமெல்லாங் குயில்களின் தொனிகளே கூடும்
முனிவர் சந்திஜெப தவம்முடிக்கக் கண்டு மந்தி
தானுமந்தப் படிமுடிக்கும் பழக்கமிகக்கொண்டு
அங்கே வனச்சிறப்புக் கண்டுவழி நடந்தார் அருகில்
வளமான ஆவடப்பொய்கையது கடந்தார்
குன்றைக் குணமான மலையதனைக் கண்டார் கண்டு
கூடிமிக அனைவோரும் ஆனந்தங்கொண்டார்
என்றும் நங்குமரன் வந்தருளும் மலையே இதனை
நாம்போய் வணங்குதல் மிகவும்நன் னிலையே
புள்ளி மான்தவ்விப் பொட்டலையுங் கண்டார் வணிகர்
மாதெனுஞ் செட்டிச்சியூரணியைக் கண்டார்
ஐயன் காவடியைப் புயமீதிற் கொண்டார் அருகிற்
கால்வாய்கள் தாண்டியே சிறுவயலைக்கண்டார்
மிகுந்த ஆவலாய்க் கோவில்தனைக் கண்டார் சென்று
அயிலாப தீஸ்வரனை நமஸ்கரித்துக்கொண்டார்
ஏழு கடல்சுவர வேலெறியச் செய்தாய் மேரு
கன்றிடச் செண்டாலடித்திடவுஞ் செய்தாய்

179826

அன்பர் வேண்டியே விடைபெற்றுக் கொண்டார் தெரு
வீதிதனில் விளையாடித் தேறு கண்டார்
பளீரெனத் தாண்டியெதி ரோடிவரும் மீன்கள் பொங்கும்
தண்ணீரைக் கண்டவுடன் பயந்தோடும் மான்கள்
விசையில் மளமளென விரைச்சல்விடக்கண்டு அன்பர்க்கு
வழிவிட்டுக்காணிக்கை வைத்திடக்கைகொண்டு
பெருச் சாளியி லமர்ந்த துதிக் கையா உந்தன்
தாளிணையை மறவாத மதிதருவாய் மெய்பா
வர்னக் கோழிக்கொடிபிடித்த கையன் என்றும்
குறையாத வாழ்வுதரும் பன்னிரு கையன்
கந்தன் திருமணம் பார்க்க விடை பெத்தார் அருகில்
திருக்குளத் தென்கரையிற் காவடியைவைத்தார்
அன்பர் ஒருமித்துக் காணிக்கை வாங்கி யதனை
ஒருவர்வச மொப்பித்துக் காவடியைத்தாங்கி
அடியார் வரும் வழியில் வனத்தூடு சென்றார் குறவர்
வள்ளிக்குச் சீதனமாய்க் கொடுத்ததுகாணென்றார்
சாளி வனத்தில் வாழ் குறவோர்கள் கூடி குன்றை
மலையோரஞ் செல்லுவார் மைத்துனனைத்தேடி
காளி பதம்பாவி வழி கூடிச் சென்றார் குன்றைப்
பதியருகில் நந்தவனப் பாதைவழி சென்றார்
வணிகர் குன்றையம் பதியிதென விண்டார அன்னங்
கொடுக்கின்ற மண்டபத்திற் குமாரனைக் கண்டார்
மிக்க வளமருவு குன்றை நகர் வேலன் சத்தி
வாலசுந் தரிகெவுரி மங்கையுமை பாலன்
சதுர் வேதம் படிக்கிறார் மானே கீழ்
வீதியிது மறையோர்கள் அனைவோருந்தானே
வேத அந்தணர்கள் வீதிவழி சென்றார் சற்குரு
ஆலயங் கண்டுபணிந் தப்பாலுஞ்சென்றார்
நல்ல கீழ்வீதி மகிமைதனைக் கண்ணே காணக்
கிடைத்ததே யின்னமும் அதிகதவம்பண்ணே
மயூர கிரியதனை வலமாக வந்தார் கந்தன்
கிருபைபெற வேண்டிமலை யடிவாரம் வந்தார்
எங்கள் சத்திவே லாயுதத்தை யுடையான் பூண்ட
தண்டைகள் கலீரெனவே வந்தருளும் நடையான்

உயர்ந்த தங்கவடி வேலலங் காரன் மாது
தையல்தெய் வானைமண மேவுசிங் காரன்
இளசை வணிகேசர் காவடிக ளென்றூர் சக்ர
வட்டமிட் டாடியே மலைதனிற் சென்றார்
மனதில் இன்பமுட னுந்தனருள் பெத்தார் வணிகர்
எல்லோருங் கந்தன்முன் காவடியைவைத்தார்
சிவ பத்தியுட னடியார்கள் சென்று மிகப்
பண்போடு குமரனைக் கண்டார்க ளன்று
மகிழ்வாய் அனைவோருஞ் சன்னதியில் வந்தார் அடியார்
அருள்பெருகும் அளவற்றகாட்சியையுகந்தார்
மகா வீரமயி லேறுஞ்சே வகனே அரிய
வேதமுடி வேபரம குருவேசண் முகனே
ஞான சிந்தையால் தீபத்தைக் கண்டார் ஐயன்
திருமுருகன் பிரசாதம் வாங்கியுட்கொண்டார்
அதிக சந்தோஷ மாகவே யிருந்தார் கந்தன்
தன்மையுட னடியார்க்கு தான்விடைபுரிந்தார்
மிகப் பத்தியுடன் மடந்தனைக்கண்டார் அன்னம்
பருப்பு நெய் பாயாசம் பழவர்க்க முண்டார்
யாவரும் சென்றங்கே பழவர்க்க மெடுத்தார் வந்தபர
தேசியர்க்கு வேணபடி அன்னங்கொடுத்தார்
மிகவும் நாட்டமிகுகோ ட்டைநகர் வாசன் நல்ல
நாதன்கிளாமடம் குருசாமி தாசன்
நல்ல இரணியூர் ஆட்கொண்ட புனிதன் சாமி
யிணையான கமலமல ரடிபரவு மனிதன்
நாளும் தனவசிய குலமருவு சீலன் வள்ளல்
நந்தபுகழ் சின்னையா தவமருவு பாலன்
சிவ சிதம்பரம் பாடினேன் உய்ய எங்கள்
சிகண்டிமலை நாதனே தேடியருள் செய்ய
முருகர் ஆனந்தக் களிப்புபா மாலே தோளில்
அன்பாகச் சூடினே னுன்றனரு ளாலே

கயிலை தந்திமுகத் தோனுமே வாழி குமர
சாமியுடன் வள்ளிதெய் வானையுமே வாழி
நல்ல செந்தமிழ்ப் புலவோரும் வாழி எங்கும்
செகமெய்க்க வருமேழு நகரத்தார் வாழி.

## குன்றக்குடி முருகர் காவடிச் சிந்து

ஆனந்தக்களிப்பு

முற்றிற்று.

---

உ

முருகன் துணை.

## எச்சரிக்கை.

---

சீர்வள ருங்கதிர் மாமலை மேவிய
செந்தமி ழின் வாசா
செந்தமி ழின் வாசா இந்தப்
பாருல கத்தி லடியவர் போற்றிய
பால கும ரேசா.

கந்தா கடம்பா குகாஞான சண்முகா
காலாயு தப்பொரு ளே
காலாயு தப்பொரு ளே என்றும்
வந்தே பணிந்த அடியார்க்கு நல்வரந்
தந்திடும் மெய்ப்பொருளே.

பச்சை மரகத மேனியெ னும் வாலை
பார்வதி பாலக னே
பார்வதி பாலக னே துய்ய
நச்சர விற்றுயில் ராமன் மருமக
னாகிய வேலவனே.

சூரர்கள் தேகந் துடிக்கத் திடுமெனத்
துண்டு படத் தானே
துண்டு படத் தானே அதி
வீரமுள்ள வெற்றி வேல்விட் டெறிந்ததோ
ராறு முகத் தோனே.

வள்ளிக் கிசைந்த வடிவுள்ள செங்கை
வளையல் சுமந் தவனே வர்னப்
வளையல் சுமந் தவனே
புள்ளி மயின்மீதி லேறிவ ரந்தர
வாபுகழ் தந் தவனே.

———

வேறு.

ஐயா அறுமுகவாவளர் வையாபுரிக்கரசே
வையாபுரிக் கரசே
கையாறிரண் டுடையாகதி ரேசாயெச்சரிகை.
விளைபூந் திணைப் புனத்திற் பரண் மீதிற் கவண் வீசும்
மீதிற் கவண் வீசும்
வளைபூண்ட கை வள்ளிமண வாளாயெச்சரிகை.

உ

முருகன் துணை.

# கட்டியம்.

---

ஸ்ரீஹரி கருணாகடாட்ச தீட்சண்ய அலங்கார உத்தண்ட மண்டலீகரா
மதனமோகன வசீகரா பஞ்சபாண அவதாரா
அஷ்டஐஸ்வரிய சம்பன்ன துஷ்டரை யடக்கும் கெடிமன்ன
மந்திர மாணிக்கா மகுட அலங்காரா இந்திர சேகரா
சர்வ உத்தண்ட அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகா
அமரர்கள் வருந்தும் அருஞ்சிறை மாற்றும் ஆயிரத்தெட்டெனும்
அண்டங்களாளும் அசுரராம் சூரரை அறுக்குஞ் சமாரா-தானும்
உத்தண்ட பிரளயமார்த்தாண்ட விஜயகெம்பீர வெற்றியஞ்சேவலா
மாருதம் வியர்க்க மன கலியர்க்க மகா அண்டம் பிளக்க
மாசிற கடித்து நடனமிடு மாவேக மயில்வாகன
வேதனைச் சிறையிடும் ஆதியம் பொருளுரைவு வேதவேதாந்த முதல்வா
மாதவன் மருகா மகேஸ்வரி புதல்வா ஐங்கரற்கிளைய ஆறுமாமுகவா
முத்தமிழ் முதல்வா மூவர்கள் விறகாபத்தர்கட்கருளும் பரசமய கோளரி
தாருகசமர்ரா ஆறிருபுயாசலா சமரில் அடல்புரியுங் கோலாகலா
சச்சிதானந்த நித்திய அகண்டபரிபூரண சர்வநிஷ்கள சம்பன்ன
சண்டப்பிரசண்ட வீதண்ட மூதண்ட கோதண்ட பாணிக்கு மருகா
தத்திமித்தாளமோ டொத்துநின்றுடிய சதாசிவன்பெற்ற குமரா
தண்டமிழ் நிறைந்திடும் அண்டரும் முனிவரும் தான்வணங்கிய வேலவா
சாலோக சாமீப சாரூப சாயுட்சிய சர்வமோட்ச அதிகாரகத்தன்

எப்படி யென்றால்

தேவாதி தேவன் செங்கை வடிவேலன்
மாயோன் மருகன் வள்ளி மனோகரன்
ஈராறு கையன் ஏழைபங் காளன்
புள்ளிமா மயிலோன் பூலோக கத்தன்
அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகா
ஆயிரத் தெட்டண்டம் இருநூத்தியிருபத்து நாலுபுவனம்
சத்தசாகரங்களும் ஒருகுடையி லாளப்படா நின்ற
சிவசுப்பிர மணியக் கடவுள் நேற்றையத் தினம்
சரவணப் பொய்கை தனி லெழுந்தருளிய

சண்முகநாதன் தயவுட னெழுந்து
மெய்யிடத் தமர்ந்த மின்னுடன் கோட்டையூர்
நன்னகர் மேவி நண்பரைக் காக்கும்
துங்க மீனாட்சி சுந்தரன் மைந்தன்
கற்பக விநாயகன் கலகமா மண்டபம்
எங்கினு மிரத்தினம் இழைத்தொளி பரவ
வச்சிர மணிக்கால் வரிசையாய் நிறுத்தி
பச்சையாய்க் கமலம் பணித்த போதியலும்
சந்திர காந்தக்கல் சரங்களுந் தொடுத்து
இந்திர நீலத்தால் இலங்குமுத் திரங்கள்
பற்பல விதமாய்ப் பண்ணியே பூட்டிக்
கைகள்தட் டோடு கனகத்தா லமைத்து
சித்திரக் கொடுங்கை திசைதொறும் விளங்க
கட்டிய கட்டடங் கனகநாட் டுள்ள
இந்திரன் சபைபோல் இலங்குமண் டபத்தில்
வடிவேல் முருகன் வந்தெழுந் தருளி
குன்றையம் பதியிற் குறவர்கள் புதல்வி
வள்ளிநா யகிக்கு மணமது செய்யும்
திருக்கல் யாணத் தினமிது வானதால்
அன்பர்களெல்லாம் அதிகசீக் கிரத்தில்
வாருங்களென்று வரிசையன் சொல்ல
ஆரகரா வென்று அதிகசந் தோஷமாய்
காவடி கட்டிக் காணிக்கை கொண்டு
சர்க்கரைக் காவடி தனையெடுத் தாடி
நிர்த்தனம் புரியும் நின்றஅன் பர்களை
கந்தசுவாமியார் கருணையாற் பார்த்து
வாழ்கவாழ்க வென்று வரங்களுங் கொடுத்து- இன்னமும்
அன்னதானம் சொர்னதானம் பூதானம் கோதானம்
கன்னிகாதானம் முதலான தானங்களுங் கொடுத்து
இன்னமும் அனைவோரையும் ரக்ஷிக்கிறோ மென்று
தீர்த்தப் பிரசாத விபூதியுங் கொடுத்து
தமதுபக்த ராகிய நகரத்தாருடன் குன்றையம்பதி
திருக்கல்யாணக் கொலுமண்ட பத்திற்கு
எழுந்தருளி வருகிறார் வெகுபராக்கு எச்சரிக்கை,

கட்டியம் முற்றிற்று,

129826